111

பதிவு அஞ்சல் மூலமாக

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.கே.வி.ரேகா, டி.சி.இ.,<br>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)<br>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம்,<br>முன்னாள் படைவீரர் மைய வளாகம் 2வது மாடி,<br>கோட்டை சுற்றுச்சாலை பெரியார் பூங்கா எதிரில்,<br>வேலூர் – 632 001.<br>e mail: ddtcpvlr9@yahoo.com<br>Ph. 0416 – 2225344 | தனிஅலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்,<br>கூழமந்தல் ஊராட்சி / கிராமம்,<br>செய்யாறு வட்டம்,<br>திருவண்ணாமலை மாவ ட்டம். |

**ந.க.எண்.1292/2018/வேம3, நாள்:31.12.2018**

அய்யா,

| | |
|---|---|
| பொருள் : | குடியிருப்பு மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் மண்டலம் – திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், கூழமந்தல் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள்.74/3எ, 4எ, 4பி, 4சி, 4இ, 6பி, 6சி, 75/1, 2, 88/16சி–ல் 6.40 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அளித்தல்–தொடர்பாக. |
| பார்வை : | 1. மனுதாரர் திரு.தீபக்குமார் அவர்களின் கடிதம், நாள் : இல்லை (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.12.03.2018.<br>2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை.2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/88/சிபி, நாள்.27.4.1988<br>3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை.2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல்ஏ, நாள். 07.11.2002<br>4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை.2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள். 19.04.2012<br>5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.25.06.2018( சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் ஒப்படைப்பு செய்து அதன் விவரம் கோரியது).<br>6. வேளாண்மை இணை இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.உ1/182/2018, நாள்.21.04.2018.<br>7. வட்டார வளர்ச்சிஅலுவலர்( கி.ஊ), அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம் ந.க.அ4/3418/2018, நாள் : 23.10.2018.<br>8. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 03.12.2018 (நன்னிலை வரி கட்டணம் கோரப்பட்டது).<br>9. மனுதாரர் கடிதம் (நன்னிலை வரி கட்டணம் செலுத்தப்பட்டு கடிதம் பெறப்பட்ட நாள்.10.12.2018).<br>---0--- |

வேலூர் மண்டலம் – திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், கூழமந்தல் ஊராட்சி / கிராமம் – சர்வே எண்கள். 74/3எ, 4எ, 4பி, 4சி, 4இ, 6பி, 6சி, 75/1,

75/2, 88/16சி –ல் 6.40 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோ... பார்வை 1–ல் காணும் கடிதம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவுஅளிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.து. இ.(வே.ம) எண்: 1500/2018** என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளிட்டு நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை 3–ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனை எண்.16–ன்படி பார்வை 5–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்டுள்ளவாறு மேற்படி மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா பொது ஒதுக்கீடுகளை சம்மந்தப்பட்ட அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், கூழமந்தல் ஊராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து அதற்கான தானபத்திர எண்.2057/2018, நாள்.10.09.2018–ன் நகல் பெறப்பட்டுள்ளது. மேலும் உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார்சாலைகளாக அமைக்கப்பட்டதற்கான நிழற்பட நகல் மற்றும் வில்லங்கச்சான்று ஆகியவை பார்வை 7–ல் காணும் **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்** அவர்களின் கடிதத்தில் பெறப்பட்டுள்ளது எனவே **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்** அவர்கள் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.மேலும், மனைப்பிரிவு நிபந்தனைகள் 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவிற்கு **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்** இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்** ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்று உடன் அனுப்பி வைக்குமாறு **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மேலும், மனுதாரர் மேற்கண்ட உத்தரவு பெற **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம்** அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

இணைப்பு–வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனை ( 2 ) நகல்கள்

**நகல் :**

1) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு செயலாணை மற்றும் வரைபடம்–1 பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களுக்கு செயலாணை மற்றும் வரைபடம்–1 இணைக்கப்பட்டுள்ளது.

**நகல் :**

திரு.G.தீபக்குமார்,
எண்.01, திருமலையார்பிள்ளை தெரு,
உத்திரமேரூர் டவுன்,
காஞ்சிபுரம் மாவட்டம் – 603 406.

121

**தனி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
**அனக்காவூர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.என்.ராஜன்பாபு,**

ந.க.எண்:ஊஅ4/3418/2018 நாள்:11.03.2019

பொருள் : குடியிருப்பு மனைபிரிவு– திருவண்ணாமலை மாவட்டம் – அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம் – கூழமந்தல் ஊராட்சி – சர்வே எண்:74/3எ, 4எ, 4பி, 4சி, 4இ, 6பி, 6சி, 75/1, 2, 88/16சி–ல் 6.40 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு அனுமதி அளித்து உத்திரவிடல் – சார்பு

பார்வை : 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்:1292/2018/வேம3 நாள்:31.12.2018

2.கூழமந்தல் ஊராட்சி மன்ற தீர்மான எண்:84, நாள்:08.03.2019

*******

__உத்திரவு:__

அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூழமந்தல் ஊராட்சியில் சர்வே எண்கள்: 74/3எ, 4எ, 4பி, 4சி, 4இ, 6பி, 6சி, 75/1, 2, 88/16சி–ல் –ல் 6.40 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மனைபிரிவுக்கு பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப இசைவு பெறப்பட்டதை தொடர்ந்து கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **ஊராட்சியின் பெயர்** | : | கூழமந்தல் |
| **மனைப்பிரிவு அமைந்துள்ள சர்வே எண்கள்** | : | 74/3எ, 4எ, 4பி, 4சி, 4இ, 6பி, 6சி, 75/1, 2, 88/16சி |
| **ம.வ/ந.ஊ.து.இ/ வே.ம எண்** | : | 1500/2018 |
| **மனைப்பிரிவின் மொத்த பரப்பு** | : | 25900.00ச.மீ(அ)6.40ஏக்கர் |
| **ஒதுக்கிய மனைகள்** | : | 129 |
| **சாதாரன மனைகள்** | : | 83 |
| **EWS மனைகளின் எண்ணிக்கை** | : | 45 மனைகள் (மனை எண்கள்:35–40, 43–57, 77–88, 91–102) |
| **கடை** | : | 1 (3385 சதுர அடி) |

__நிபந்தனைகள்:__

- நில உரிமம் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியபட்டாலோ அல்லது மனைபிரிவுக்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.
- விற்பனைக்கு உண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் அகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊராட்சி நிர்வாகத்தின் அனுமதியின்றி செய்தல் கூடாது.
- அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில்காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் குடியிருப்பு கட்டவே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டக சாலை, குடியிருப்பு கட்டிடம் அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.
- பொது தேவைகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடஙகள் நகர் ஊரமைப்பு துறையால் அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- மனைப்பிரிவில் அமையும் மனையில், கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சி நிர்வாகத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும்.
- நகர் ஊரமைப்பு துறையின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றி இருக்க வேண்டும்.

தனி அலுவலர், கூழமந்தல் ஊராட்சி/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி,ஊ)
அனக்காவூர்

11/3/09

பெறுநர்:

திரு.தீபக்குமார்,
த/பெ.கோத்தம்சந்த்,
கதவு எண்:1,
திருமலையாபிள்ளை தெரு,
உத்திரமேரூர் (ம) தாலுகா,

நகல்:

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்கள் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல்:

சார் பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், தூசி.